**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.457** **நாள்: 09.09.2026**

**மாண்புமிகு மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் கோ.க. அருண்ராஜ் அவர்கள் தலைமையில், திரு.வி.க.நகர் மற்றும் இராயபுரம் மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மற்றும் இராயபுரம் மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் கோ.க. அருண்ராஜ் அவர்கள் தலைமையில், இன்று (09.09.2026) திரு.வி.க.நகர் மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இராயபுரம் மற்றும் திரு.வி.க.நகர் மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள், மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள், கால்வாய் மேம்பாட்டுப் பணிகள், நீர்நிலைகளில் ஆகாயத்தாமரைகள் மற்றும் வண்டல்கள் அகற்றும் பணிகள் குறித்தும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளான மழைநீர் தேங்கும் தாழ்வான பகுதிகளில் மழைநீரை அகற்ற தேவையான மோட்டார் பம்புகள், தற்காலிக நிவாரண முகாம்கள், மைய சமையல் கூடங்கள், ஆபத்தான மரக்கிளைகளை அகற்றுதல், மின் இணைப்புப் பெட்டிகளை உயர்த்தி அமைத்தல் உள்ளிட்ட முன்னெச்சரிக்கைப் பணிகள் குறித்து மாநகராட்சி, சென்னைக் குடிநீர் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், நெடுஞ்சாலைத்துறை, நீர்வளத்துறை, இரயில்வே துறை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் உள்ளிட்ட சேவைத் துறைகளுடன் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**இக்கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது :**

இராயபுரம் மற்றும் திரு.வி.க.நகர் மண்டலங்களில் உள்ள மழைநீர் வடிகால்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளை வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாக முடிக்க வேண்டும். மழைநீர் வடிகால்களிலிருந்து தூர்வாரப்படும் வண்டல்களை உடனுக்குடன் முறையாக அப்புறப்படுத்த வேண்டும். திடக்கழிவுகளை சாலையோரங்களில் கொட்டுவதைத் தவிர்த்து முறையாக வீடுகளிலிருந்து பெற வேண்டும். மழைநீர் வடிகால் பணிகள் நடைபெற்று வரும் இடங்களில் பாதுகாப்பு தடுப்புகளை அமைக்க வேண்டும்.

கடந்த பருவமழைக் காலங்களில் அதிகளவு தண்ணீர் தேங்கிய இடங்களில் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அனைத்து விதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். மழைக்கு முன்பாக சாலைகளில் உள்ள பள்ளங்களை உடனடியாக சீரமைக்க வேண்டும் என மாண்புமிகு மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.வி. விஜய் தாமு (இராயபுரம்), திருமதி எம்.ஆர். பல்லவி (திரு.வி.க.நகர்), மண்டலக் கண்காணிப்பு அலுவலர்கள் திருமதி ஆஷா அஜித், இ.ஆ.ப., (இராயபுரம்), திரு.பி.கணேசன், இ.ஆ.ப., (திரு.வி.க.நகர்), வட்டார துணை ஆணையாளர்கள் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., (வடக்கு), திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., (மத்தியம்), காவல் துணை ஆணையாளர்கள் திரு.சமேசிங் மீனா, இ.கா.ப., (புளியந்தோப்பு), திரு.ச.ராஜேஷ் கண்ணன், இ.கா.ப., (கொளத்தூர்), திரு.பாஸ்கர், இ.கா.,ப., (வண்ணாரப்பேட்டை), மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி, நீர்வளத்துறை, சென்னை குடிநீர் வாரியம், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மின்சாரத்துறை, மருத்துவத்துறை உள்ளிட்ட சேவைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**இராயபுரம் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாட்டுப் பணிகள்**

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலத்தில் 1160 மீ. நீளத்தில் மழைநீர் வடிகால் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 474 மீ. நீளத்தில் முடிக்கப்பட்டுள்ளது. 413 மீ. நீளத்தில் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், 4044 வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் முதற்கட்டமாக வண்டல்கள் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டு, இரண்டாம் கட்டமாக 2251 வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. 89.07 கி.மீ. நீளத்தில் உள்ள மழைநீர் வடிகால்களில் 26.98 மீ. நீளத்தில் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டு, 30.29 மீ. நீளத்தில் பணிகள் நடைபெற்று வருகிறது.

குளங்கள் புனரமைப்புப் பணிகளில் 33 குளங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 26 குளங்களில் புனரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டு, 7 குளங்களில் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இராயபுரம் மண்டலத்தில் உள்ள 5 சுரங்கப்பாதைகளில் 25 மின்மோட்டார் பம்புகள், 8 டீசல் மோட்டார் பம்புகள், மழைநீர் தேங்கும் இடங்களில் 30 எண்ணிக்கையில் பம்ப் மற்றும் சம்ப், 7 பாப்காட் வாகனங்கள், 14 பவர்ஷா இயந்திரங்கள், டிரக்ஸ், ஜே.சி.பி. பொக்லைன், மின் ஏணி, ரொபோடிக் எஸ்கவேட்டர், சக்ஷன் கம் ஜெட்டிங் இயந்திரங்கள் ஆகியவை தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை தங்க வைப்பதற்காக 13 நிவாரண மையங்கள், உணவு சமைப்பதற்காக 2 மைய சமையல் கூடங்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், மைய சமையல் கூடங்களில் இருந்து பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உணவு வழங்குவதற்காக பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**திரு.வி.க.நகர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாட்டுப் பணிகள்**

திரு.வி.க.நகர் மண்டலத்தில் 10.376 கி.மீ. நீளத்திலான மழைநீர் வடிகால் பணிகளில் 8.935 கி.மீ. நீளத்தில் பணிகள் முடிக்கப்பட்டு, 1.441 கி.மீ. நீளத்தில் பணிகள் நடைபெற்று வருகிறது. 1.040 கி.மீ. நீளத்திலான கால்வாய்கள் மேம்பாட்டுப் பணிகளில் 0.910 கி.மீ. நீளத்தில் முடிக்கப்பட்டு, 0.130 கி.மீ. நீளத்தில் பணிகள் நடைபெற்று வருகிறது. திரு.வி.க.நகர் மண்டலத்தில் உள்ள 8258 வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் 3722 வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டு, 1592 வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று

வருகிறது. 114.51 கி.மீ. நீளத்திலான மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணிகளில் 61.60 கி.மீ. நீளத்தில் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டு, 5.99 கி.மீ. நீளத்தில் பணிகள் நடைபெற்று வருகிறது. வில்லிவாக்கம் இரயில்வே கால்வாயில் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டு, கன்னிகாபுரம் ஓட்டேரி நல்லா கால்வாயில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது.

பெரம்பூர் சுரங்கப்பாதையில் உள்ள கிணற்றில் தூர்வாரும் பணி முடிக்கப்பட்டுள்ளது. கணேசபுரம் சுரங்கப்பாதையில் உள்ள கிணற்றில் தூர்வாரும் பணி நடைபெற்று வருகிறது. பம்ப் மற்றும் சம்ப் ஆகியவை இயங்கும் நிலையில் உள்ளது. தாழ்வான பகுதிகளில் 51 மோட்டார் பம்புகள் தயார்நிலையில் உள்ளது.

6 டிரக்ஸ், 4 பாப்காட், 2 ஜே.சி.பி., 12 டெலஸ்கோபிக் மர அறுவை இயந்திரங்கள், 22 பவர் ஷா இயந்திரங்கள், பொக்லைன், சக்திமான் மர அறுவை இயந்திரம், மின் ஏணி, ரொபோடிக் எஸ்கவேட்டர், சக்ஷன் கம் ஜெட்டிங் உள்ளிட்ட இயந்திரங்கள் தயார்நிலையில் உள்ளன.

தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை தங்க வைப்பதற்கு 19 நிவாரண மையங்கள், உணவு சமைப்பதற்கு 15 மைய சமையல் கூடங்கள், பள்ளி மாணவர்களுக்கு உணவு தயாரிக்கும் 3 சமையல் கூடங்கள் ஆகியவை தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மைய சமையல் கூடங்களில் தயாரிக்கப்படும் உணவுகளை பாதிக்கப்பட்ட இடங்களுக்கு கொண்டு செல்வதற்கு பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கண்ட பணிகளை ஆய்வு மேற்கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடைபெற்று வரும் முன்னெச்சரிக்கைப் பணிகளை போர்க்கால அடிப்படையில் தீவிரமாக மேற்கொண்டு செப்டம்பர் மாதத்திற்குள் முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**